**தலைப்பு 278 - இரத்தினபுரி மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 278 - இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அறிக்கைகள் ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 மே 04 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

மாவட்ட செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 901 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 852 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 49 மில்லியன் அதாவது 5.44 சதவீத நிதிஏற்பாடு எஞ்சியிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 734.20 | 730.41 | 3.79 | 0.52 |
| மூலதனம் | 167.00 | 121.27 | 45.73 | 27.38 |
| மொத்தம் | 901.20 | 851.68 | 49.52 | 5.49 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய 26 அமைச்சுக்களிடமிருந்தும் 17 திணைக்களங்களிடமிருந்தும் ரூபா 2,501 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 2,250 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது அதன் பிரகாரம் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 251 மில்லியன் தொகை அதாவது மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டில் 10 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான 27801 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவுகள் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ள படியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 61.34 | 43.97 | 39.00 | 45.61 | 200.00 | 152.09 |

## 2.3 கட்டுநிதிக் கணக்குகள்

மாவட்டச் செயலகத்தின் கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 100,000 ஆன செலவு மீதியொன்று காணப்பட்டதுடன், அது 2016 சனவரி மாதத்தின் போது தீர்க்கப்பட்டிருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

மாவட்ட செயலகத்தின் கீழ் 07 பொது வைப்புக் கணக்குகளுக்குரிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 515 மில்லியனாக காணப்பட்டது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இல. | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6000/0000/00/0002/0056/000 | 1,371,650 |
| 6000/0000/00/0013/0043/000 | 1,458,765 |
| 6000/0000/00/0018/0013/000 | 29,031,000 |
| 6000/0000/00/0001/0042/000 | 1,075,880 |
| 6000/0000/00/0016/0011/000 | 328,249,104 |
| 6000/0000/00/0017/0002/000 | 156,122,706 |
| 6003/0000/00/0054/0000/000 | (2,294,477) |
| மொத்தம் | 515,014,628 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டிற்குரித்தாக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 117,181 ஆன பொறுப்புக்கள் 2016 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டிருந்த போதிலும், அப்பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 கட்டுநிதிக் கணக்குகள்

2015 திசெம்பர் 23 ஆந் திகதிய 06/2016 ஆம் இலக்க திறைசேரி செயற்பாட்டு சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தியின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசேட்டின் மீதி 2016 சனவரி 04 ஆந் திகதிக்கு முன்னர் திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய போதிலும், அது 2016 சனவரி 07 மற்றும் 20 ஆந் திகதிகளில் தீர்க்கப்பட்டிருந்தன

### 3.3 பொது வைப்புக் கணக்கு

6003/0000/00/0054/0000/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் மீதி நடைமுறைக்கு புறம்பாக ரூபா 2,294,477 ஆன வரவு மீதியொன்றாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இவ்வரவு மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கானன முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

27801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை 2,503,352 ஆக இருந்தது. அதில் ரூபா 90,050 தொகை 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 348,905 தொகை 3 வருடங்களுக்கும் 7 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலமாகவும், ரூபா 539,187 தொகை 1 ஆண்டிற்கும் 2 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரியதாக இருந்து வந்திருந்த போதிலும், அம்மீதிகளைத் தீர்வுசெய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 நவம்பர் மாதத்தின் போது இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தரொருவரிடமிருந்து ரூபா 108,665 ஆன கடன் மீதி 13 மாதங்களாக இருந்து வந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இம்மீதிகளைத் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (அ) நிதிப் பிரமாணம் 66 | 531,320 | மூலதனச் செயற்திட்டங்களுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாடு மாற்றங்களுக்காக திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (அ) நிதிப் பிரமாணம் 215 | 2,127,124 | இரத்தினபுரி மற்றும் எஹலியகொடை பிரதேச செயலகங்களின் மூலம் 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட பொருட்கள் அவ்வாண்டில் கொள்வனவு செய்யப்படாமல் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. அதற்காக தயாரிக்கப்பட்ட காசோலை வழங்குனருக்கு சமர்ப்பிக்கப்படாமல் காலாவதியான காசோலையொன்றாக கருதி வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதன் தேறிய விளைவு நிதி பிரமாணம் 215 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக எதிர்காலத்தில் செய்யக்கூடிய கொடுப்பனவான்றாக வைப்புக் கணக்கில் வைத்திருக்கப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3.5 உள்நாட்டு நிதியளிப்புக்களின் கீழ் செயற்திட்டங்கள் அமுல்படுத்தல்

### போதியளவில் நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட போதியளவில் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) இருபத்தைந்து இலட்சம் வீட்டுப் பொருளாதார அலகுகளை மேம்படுத்தும் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் VI ஆம் கட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது பின்வரும் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

| செயற்திட்டம் | செலவினங்கள் |
|---|---|
| | ரூபா |
| 57500 நலனாளிகளுக்கு பழக் கன்றுகள் வழங்கல் | 9,948,930 |
| 57500 நலனாளிகளுக்கு மரக்கறி நாற்றுக்கள் வழங்கல் | 2,072,720 |
| 30809 அரச நிறுவனங்களுக்கும் ஊழியர்களுக்கும் பழக் கன்றுகள் வழங்கல் | 5,545,620 |
| 43125 அகத்திக்கீரை நாற்றுக்கள் வழங்கல் | 1,293,750 |
| 48398 தென்னங் கன்றுகள் வழங்கல் | 5,000,000 |
| | 23,861,020 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 57500 நலனாளிகளுக்கு பழக்கன்றுகள் வழங்கல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- நலனாளினால் கோரப்படாதிருந்த 9608 நாற்றுக்களுக்காக ரூபா 1,595,940 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், நலனாளினால் கோரப்பட்ட எண்ணிக்கையினை விட 21236 நாற்றுக்கள் ரூபா 3,816,280 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

- 10 பிரதேச செயலகங்களினால் 8765 கொய்யா, மாதுளை மற்றும் பலா கன்றுகள் கோரப்பட்டிருந்த போதிலும், அவை எதுவும் வழங்கப்படாமல் இருந்ததுடன், 15 பிரிவுகளுக்கு கோரப்படாத ரூபா 153,000 பெறுமதியான 2040 எலுமிச்சங் கன்றுகள் வழங்குனரால் வழங்கப்பட்டிருந்தன.

- விண்ணப்பித்த நாற்றுக்களுக்குப் பதிலாக வேறு நாற்றுக்கள் வழங்கியதால் ரூபா 80,075 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தன.

- மாவட்ட விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் நாற்று மேடைகள் பரீட்சிக்கப்பட்ட போதிலும், கொள்வனவு செய்த ரூபா 373,500 பெறுமதியான 3300 நாற்றுக்கள் குறைபாடுகளுடன் இருந்தன.

(ii) கிராம சேவையாளர் பிரிவொன்றில் தெரிவு செய்யப்பட்ட நாற்று மேடையாளர்களுக்கு தென்னஞ் சோறு சாடிகள் மற்றும் மரக்கறி விதைகள் வழங்கி அதன் மூலம் 517,500 மரக்கறி நாற்றுக்கள் நலனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- விவசாய உத்தியோகத்தர்களின் மேற்பார்வையொன்று இல்லாமல் நாற்று மேடையாளர்களுக்கு விதைகள் மற்றும் சாடிகள் வழங்கப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

- விவசாயிகளை அறிவூட்டும் நோக்கில் இச்சாடிகளில் நாற்றுக்களை இடுதல் தொடர்பான பயிற்சியொன்று இரத்தினபுரி விவசாய போதனாசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- நாற்று மேடைகளை பரிசோதித்து நாற்றுக்களை மேம்படுத்தல் தொடர்பாக பரிந்துரைகள் வழங்கப்படாமல் இருந்ததுடன் அப்பரிசோதனைகளுக்குரிய வளர்ச்சி குறிப்புப் பத்திரங்கள் மற்றும் தர அறிக்கை என்பன கோவைகளில் காணப்படவில்லை.

(iii) விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 35,640 கூட்டுப்பெறுமதியான 1188 அகத்திக் கன்றுகளும் ரூபா 271,000 பெறுமதியான 542 தென்னங் கன்றுகளும், சாடிகளில் இடப்பட்ட 10,630 நாற்றுக்களும் வளரக்கூடிய நிலையில் இல்லையென கமநல சேவை நிலையங்களினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(iv) பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் சகல கிராம சேவையாளர் பிரிவுகளிலும் கிராமிய குழு மற்றும் பிரதேச செயலகப் பிரிவுக் குழுக்கள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அதன் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய

நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறனாக அமுல்படுத்தல் செயன்முன்னேற்ற புலனாய்வு, சிக்கல்களை இனங்கண்டு தீர்வுகள் மற்றும் நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற பணிகளைச் செயற்படுத்துவதற்கு முடியாமல் இருந்தன.

(v) முன்னறிவித்தல் வழங்குவதாயின் நாற்றுக்களை வழங்க முடியுமென இரத்தினபுரி அரச விவசாயப் பண்ணை முகாமையாளரால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அரச நாற்று மேடைகளிலிருந்து கொள்வனவு செய்யுமாறு விவசாய செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் ரூபா 16,995,440 பெறுமதியான 132,885 நாற்றுக்கள் 04 சந்தர்ப்பங்களின் போது தனியார் நாற்று மேடையாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. நாற்றுக்களை போக்குவரத்து செய்து தர முடியாதென இரத்தினபுரி அரச விவசாயப் பண்ணை மூலம் அறிவிக்கப்பட்டிருந்தமை இதற்கான காரணமென மாவட்ட செயலாளர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

(vi) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் இருபத்தைந்து இலட்சம் வீட்டுப் பொருளாதார அலகுகளை மேம்படுத்தும் நோக்கில் 2014 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்ட திவிநெகும VI ஆம் கட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக இரத்தினபுரி மாவட்டத்திற்காக ரூபா 23,861,020 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் இச்செயற்திட்டங்களின் தற்போதைய நிலைமையை மதிப்பீடு செய்தல் உட்பட, பராமரிப்பு, கட்டுப்பாடு மற்றும் பின்தொடர் நடவடிக்கை என்பவற்றிற்காக முறையொன்று காணப்படவில்லை. ஆதலால் மக்கள் பங்களிப்புடன் வீட்டு அலகு மேம்படுத்தல் நஞ்சு மற்றும் விஷமற்ற புதிய மரக்கறிகளை தமது வீட்டுத் தோட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ளல், உணவுப் பாதுகாப்பிற்கு பங்களித்தல், குடும்ப சுகாதார மட்டத்தினை மேம்படுத்தல், குடும்பங்களில் மரக்கறிக்காக செலவிடும் பணத்தை குறைத்தல் மற்றும் வீட்டுத் தோட்டத்தை முறையாக தொடர்ச்சியாக பேணுவதற்காக சமுகத்தினுள் ஆர்வத்தை ஏற்படுத்தல் போன்ற அடிப்படை நோக்கங்கள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிப் பங்களிப்புடன் நல்லாட்சியை நோக்கிய கிராமிய மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி செயற்றிட்டம் (GLED) 2013 ஆம் ஆண்டின் ஒக்தோபர் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பெறுபேறு மற்றும் இலக்கிடப்பட்ட திட்டமிடல், பிராஜாவுரிமைக் கொள்கை E - பிராஜாவுரிமை நிகழ்ச்சித்திட்டம், தனிநபர் நலன்பெறுனர் நுழைவு மற்றும் சன சமூக அமைப்புக்களை பலப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் அதன் அடிப்படை கூறுகளாக இருந்தன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப்

பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) அரச நிறுவனமொன்றினால் பொது மக்கள் தேவைகளை முறையாக நிறைவேற்றுவதற்கு கடப்பாடொன்றை ஏற்படுத்துவதே பிரஜைகள் கொள்கையின் நோக்கமாக இருந்தது. எனினும் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2015 யூன் மாதம் வரை 17 மாதங்கள் கடந்திருந்த போதிலும் அதன் முதல் கட்டமான செயல்விதிக் கோவை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் அது தயாரிக்கப்பட்டு வழிகாட்டலின் பிரகாரம் பிரஜைகள் கொள்கையொன்று ஸ்தாபிக்காமையால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 969,095 தொகை பயனற்ற செலவினமாக இருந்தது.

(ii) பிரஜைகளின் தகவல்களை இலகுவாக பெற்றுக் கொள்வதற்காக தரவு கோவையொன்று தயாரிக்கப்பட்டு நாளதுவரையாக்கல் E – பிரஜைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாக இருந்த போதிலும் அதற்குத் தேவையான கணனி மற்றும் இணையத்தள வசதிகள் வழங்கப்படாமையால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 21,975 தொகை பயனற்ற செலவினமாக இருந்தது.

(iii) வியாபார முன்னேற்றத்திற்கான உபகரணங்களை அவர்களின் தெரிவு அடிப்படையில் கொள்வனவு செய்து வழங்குவது தனி நபர் நலன் நுழைவு செயற்திட்டத்தின் நோக்கமாகும். 187 செயற்திட்ட அறிக்கைகளில் 12 தெரிவு செய்யப்பட்டு அந் நளனாளிகளுக்கு ரூபா 448,000 ஆன உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பணிக்காக ரூபா 410,175 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(iv) பிரதேச செயலகப் பிரிவினுள் அரச சார்பற்ற அமைப்புக்களை ஒன்று திரட்டி அதன் பிரகாரம் சமூக அடிப்படையிலான குழுக்களும் பிரதேச குழுக்களும் உருவாக்கப்பட்டதன் பின்னர் மாவட்ட குழுவொன்று உருவாக்குதல் சமூக அடிப்படையிலான அமைப்பினைப் பலப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். இதற்காக ரூபா 408,900 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் உருவாக்கப்பட வேண்டிய மாவட்டக் குழு 2015 மே மாதம் வரையிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) வைப்புப் பதிவேட்டின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தில் ரூபா 4,084,780 செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்தந்த செயற்திட்டத்திற்கான செலவினம் மற்றும் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த செலவினம் என்பவற்றை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.

(இ) விவசாய அமைச்சிடமிருந்து கிடைத்த நிதி ஏற்பாட்டு அடிப்படையில் 2013 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட மேலதிக உணவுப் பயிர்

உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிலக்கடலை விதை உற்பத்தி மேம்படுத்தல் செயற்திட்டத்திற்காக ரூபா 1,950,000 ஆன 13,000 கி.கி நிலக்கடலை விதைகள் விவசாயிகளுக்கு இடையே பகிரப்பட்டிருந்தன. மாவட்ட விவசாய பணிப்பாளரின் செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் திட்டமிடப்பட்ட விளைச்சலின் இலக்கு பயன்படுத்தலின் 1:15 ஆக இருந்தது. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் செயற்திட்ட முன்னேற்றம் பயன்படுத்தலில் 1:7 என்ற மிகக்குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. இதனால் எதிர்ப்பார்க்கப்பட்ட போதிலும் கிடைக்காத விளைச்சல் 111 மெற்றிக் தொன்களாக இருந்தன.

(ஈ) சிறுவர் செயலகத்திலிருந்து கிடைத்த நிதி ஏற்பாடு மூலம் அனைத்து முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்காக பசும் பால் கோப்பையொன்று வழங்கப்பட வேண்டிய போதிலும் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இரத்தினபுரி பிரதேசத்தின் மொத்த முன்பள்ளி பாடசாலைகளில் முறையே 2.7 மற்றும் 1.8 சதவீதம் என மிகவும் குறைந்த பாடசாலைகளின் எண்ணிக்கைக்கு இச்சலுகை வழங்கப்பட்டிருந்தன. இவ்விரு வருடங்களில் வழங்கப்பட வேண்டிய 18 மாதங்களில் 07 மாதங்களுக்கு மாத்திரம் பால் வழங்கப்பட்டிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டிற்காக கிடைத்த ரூபா 812,800 நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 9,360 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. 2015 ஒக்தோபர் மாதம் வரையிலும் இந்நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுப் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) அரச ஊழியர் மற்றும் நடுத்தர வகுப்பு வீடமைப்பு செயற்திட்டத்திற்காக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான தோட்டமொன்றில் 14 ஹெக்டேயரைக் கையேற்பதற்கு 1964 இன் 28 ஆம் இலக்க காணி கையேற்றல் அதிகாரச்சட்டத்தின் கீழ் இரத்தினபுரி பிரதேச செயலாளரால் 2014 பெப்ரவரி மாதத்தின் போது அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) வீடுகளைப் பெறுவோர் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை வீடமைப்பு நலன்புரி சங்கமொன்று ஆரம்பிக்கப்பட்டு அதன் அங்கத்தவர்களிடமிருந்து ரூபா 139,890,000 தொகை பெற்றுக்கொண்டு அப்பணம் இரத்தினபுரி பிரதேச செயலாளரின் தனிப்பட்ட சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. அவ்வங்கிக் கணக்கு, செயலாளர் 2000 ஆம் ஆண்டிற்கு முன் பயன்படுத்தப்பட்ட பெயரில் அக்கணக்கு திறக்கப்பட்டிருந்தது. பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட பெயரை மீண்டும்

பயன்படுத்தி ஒரே காலப்பகுதியில் ஒரு நபரினால் இரண்டு பெயர்களைப் பயன்படுத்தி அரச சேவையில் கடமைகளிலும் நிதிக் கொடுக்கல் வாங்கல்கல்களிலும் ஈடுபட்டமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாக இருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 53 இன் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளை கையேற்பது இயலுமான வரை தவிர்க்கப்பட வேண்டிய போதிலும் கையேற்கப்பட்ட ஆதனத்தில் 75 சதவீதம் அபிவிருத்தி செய்யப்பட்ட காணியாக இருந்ததுடன், அதில் 5 ஏக்கர் வயல்களாக இருந்தன.

(iii) காணியில் கட்டிடங்களுக்காக பிரதான விலை மதிப்பாளரின் அறிக்கையொன்று பெற்றுக்கொண்டு அதனை அமைச்சு செயலாளருக்கு சமர்ப்பிப்பதற்கு நிதிப்பிரமாணம் 53(2) மற்றும் (3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) வீடுகளைப் பெறுவோரின் தகவல்கள் மற்றும் காணி இழப்பீடு கொடுப்பனவு உட்பட காணி பகிர்ந்தளித்தல் முறைமை தொடர்பாக எவ்வித தெளிவுபடுத்தல்களும் மாவட்ட செயலாளர், இரத்தினபுரி பிரதேச செயலாளர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை உட்பட எந்தவொரு பொறுப்பொன்றையும் எவரேனும் ஒருவரால் ஏற்கப்படாமையால் இக்காணிக் கையேற்பின் நோக்கம் நிச்சயமற்றதாக இருந்தது.

(v) காணியை கையேற்பதற்காக ரூபா 110,000,000 தொகை இரத்தினபுரி பிரதேச செயலகத்தினால் 2014 ஏப்ரல் மாதத்தின் போது கையேற்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அறிவித்தல் வழங்கப்பட்டது தவிர காணி கையேற்றலுக்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருந்ததுடன், அத்தொகை 2014 ஏப்ரல் மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரை விளைவற்று காணப்பட்டதன் பின்னர் கணக்கு தீர்த்தலின் விளைவாக அப்பணம் திறைச்சேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

(vi) குறித்த காணியைக் கையேற்பதற்கு எதிராக பயன்படுத்துவோரால் உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன், குறித்த விடய கோவை இலஞ்ச ஊழல் புலனாய்வு ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களால் எடுத்துச் செல்லப்பட்டது தவிர இந்த செயற்திட்டத்தின் எந்தவொரு செயன்முன்னேற்றமும் கண்டறியப்படவில்லை.

(vii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் வீட்டு நலனாளிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணம் 2013 செப்தம்பர் மாதத்திலிருந்து நிலையான வைப்புக்கள் மற்றும் 05 சேமிப்புக் கணக்குகளில் அவ்வப்போது முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 145,858,078 ஆன மொத்த பெறுவனவுகளில் வீட்டு நலனாளிகளுக்கு ரூபா 32,860,000 மீளச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் ரூபா 110,000,000 தொகை பொது திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

கொடுப்பனவுகளில் ரூா 149,650 தொகை இனங்காணப்படாத செலவினமொன்றாக இருந்ததுடன், 2015 மார்ச் 19 அந் திகதி வரையிலும் கணக்குகளில் ரூபா 2,848,428 ஆன மீதியொன்று காணப்பட்டது.

(viii) 62 வைப்பாளர்களினால் வைப்புச் செய்யப்பட்டிருந்த பணம் மீளச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2015 மார்ச் மாதம் வரை அவர்களுக்கு உரித்தாக வேண்டிய போதிலும், செலுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வட்டித் தொகை ரூபா 1,401,359 ஆக இருந்தது. அது அரச உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் மேற்கொள்ளப்பட்ட போலியான பணப் பரிமாற்றமாகையால் அரச சேவையின் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படுமென்பதை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதுள்ளது.

(ix) காணியைக் கையேற்பதற்காக அறிவித்தல் வழங்குதல் உட்பட அதனுடன் இணைந்த நடவடிக்கைகள் இரத்தினபுரி பிரதேச செயலாளரினால் நிறைவேற்றப்படும் வேளையில் வீடமைப்பு நலன்புரி சங்கத்தின் செயலாளராக கடமை புரிந்து ரூபா 139 மில்லியன் தொகை அவரால் சேகரிக்கப்பட்டிருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXX ஆம் அத்தியாயத்தின் 1.10 ஆம் பிரிவிற்கும் XXXI ஆம் அத்தியாயத்தின் 1.1 ஆம் பிரிவிற்கும் முரணாக அச்சங்கத்தின் நடவடிக்கைகள் மற்றும் பிரதேச செயலாளரின் கடமைகளுடன் நேரடியாக கடப்பாடு இருந்தது.

இதனால் தாபன விதிக்கோவையின் II தொகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 1.4 ஆம் பிரிவு மற்றும் 8.2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட முதலாவது பட்டோலையின் (4), (10), (12) மற்றும் (15) ஆம் பந்திகளின் பிரகாரம் இரத்தினபுரி பிரதேச செயலாளரினால் அரசின் சேவை உட்பட அவர் வகிக்கும் பதவியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுமென்பதை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதுள்ளது.

(ஆ) 4 உத்தியோகத்தர்களினால் நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் மாதாந்தம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரயாணச் செலவின கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், இரத்தினபுரி பிரதேச செயலகத்தில் நீண்டகாலமாக நிறுத்திவைக்கப்பட்டு ரூபா 139,521 தொகையான மொத்த தொகையும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி ஒரே தடவையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) பெல்மதுல்ல பிரதேச செயலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட 02 நிர்மாண வேலைகளின் நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா 30,810 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) இருபத்தைந்து இலட்சம் வீட்டுப் பொருளாதார அலகுகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தனியார் வழங்குனர்களினால் இலவசமாக நாற்றுக்களைப் போக்குவரத்துச் செய்வதற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக

எவ்வித கவனமும் செலுத்தாமல் அதற்கு பின்னர் விநியோகிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கடிதத்தினை அடிப்படையாகக் கொண்டு ரூபா 521,320 தொகை நாற்றுக்களைப் போக்குவரத்துச் செய்வதற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இது அறவிடப்பட்டதாக மாவட்ட செயலாளரால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

**3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) அரசின் கொள்வனவு வழிகாட்டல் செயற்பாடுகளிலிருந்து விலகல்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட அரசின் கொள்வனவு வழிகாட்டல்களுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.9.1 வழிகாட்டலுக்கு முரணாக 16 பிரதேச செயலகங்களினால் 1103 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 545,213,986 தொகை சமூக அடிப்படையிலான சங்கங்களிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.9.1 வழிகாட்டலுக்கு முரணாக மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 80,668,323 தொகையான 06 கலாசார நிலையங்களின் நிர்மாணம் ரூபா 2,000,000 இற்கு குறைவாக வரும் வகையில் பகுதிகளாக்கப்பட்டு 11 சமூக அடிப்படையிலான சங்கங்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.1 மற்றும் 4.4 வழிகாட்டலுக்கு முரணாக ரூபா 16,506,145 தொகை அச்சங்கங்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தன. அவ்வாறே அச்சங்களுக்கு ஒப்பந்தம் தொடர்பாக உள்ள இயலுமை, பதிவிற்கான தகைமை, முன் ஒப்பந்த நடவடிக்கைகள் மற்றும் இக்டாட் தரப்படுத்தல் போன்றவை முறையான குழுவொன்றின் மூலம் ஆராயப்பட்டிருக்கவில்லை.

(iii) தனிநபர் நலன் நுழைவு செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 410,175 ஆன உபகரணங்களில் தரம் தொடர்பான சான்றிதழொன்று அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8.12.3 வழிகாட்டலின் பிரகாரம் நிலைய பொறுப்பு உத்தியோகத்தரால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஒரு கலாசார நிலையத்திலும் 02 அரச விடுதிகளிலும் நிறைவேற்றப்பட்ட மேலதிக வேலைகள் முறையே 28 சதவீதம், 19 சதவீதம் மற்றும் 17 சதவீதமாக இருந்த போதிலும், அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8.13.4 வழிகாட்டலின்

பிரகாரம் அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் பேரில் ரூபா 1,531,883 ஆன மொத்தக் கிரய மதிப்பீடு மீளத் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரத்தினபுரி பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்திற்காக திரைச்சீலை கொள்வனவு செய்வதற்கு மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன், வழங்குனரின் கணிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 436,625 தொகை செலுத்தப்பட்டிருந்தது. கொடுப்பனவின் போது நிறைவேற்றப்பட்ட சதுரஅடி அளவிற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.8 செயற்பாட்டு பலவீனங்கள்

மாவட்ட செயலகத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் வழிக்காட்டலின் படி அனர்த்தம் இடம்பெற்று 12 மாதங்களுக்குள் மானியங்கள் வழங்கப்பட்டு முடிக்கப்பட வேண்டுமெனினும், அயகம மற்றும் நிவிதிகல பிரதேசங்களில் 2014 முதற் காலாண்டில் இடம்பெற்ற வீடுகளின் சேதங்களுக்காக ரூபா 938,000 தொகை 2015 ஆகஸ்ட் மாதம் வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அயகம பிரதேசத்தின் 03 பிரிவுகளில் மண்சரிவு அபாயம் தொடர்பாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 2014 ஒக்டோபர் மாதத்தில் அறிவிக்கப்பட்ட போதும், 2015 ஆகஸ்ட் மாதம் வரையிலும் அது தொடர்பான பரிசோதனை அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்தோடு அனர்த்த நலன்புரி சேவை பிரிவிற்குச் சொந்தமான படகு மற்றும் இயந்திர படகு என்பன மேவுகையொன்று இல்லாமல் பாதுகாப்பற்று காணப்பட்டன.

(இ) எஹலியகொட பிரதேச செயலகத்தின் மூலம் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,577,906 ஆன பொருட்கள் 2014 திசெம்பர் 31 திகதி வரைக்கும் குறிப்பிட்ட நலனாளிகளுக்கு வழங்கப்படாது 2015 யூன் மாதம் வரையிலும் பிரதேச செயலகத்தில் விளைவற்று வகையில் வைக்கப்பட்டிருந்த அதேவேளை அப்பொருட்கள் அலுவலக வளவில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டன. அத்தோடு 2014 ஆம் ஆண்டின் போது மேலும் பல பொருட்களுக்காக ரூபா 2,302,025 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவை 2015 யூன் மாதம் வரையில் அலுவலகத்திற்கு கிடைக்கப் பெறவில்லை. நிதிப் பிரமாணம் 137(5) இன் படி பொருட்கள் சரியான முறையில் பொறுப்பேற்கப்பட்டமை தொடர்பாக எவ்வித உறுதிப்படுத்தலுமின்றி இக்கொடுப்பனவுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் எஹலியகொட பிரதேச செயலகத்தின் மூலம் 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு

செய்யப்பட்ட ரூபா 1,310,925 ஆன பெருட்கள் 2015 யூன் மாதம் அளவிலும் பகிர்ந்தளிக்கப்படாதிருந்தது. அப்பொருட்களின் உத்தரவாத காலம் பாவனைக்கு உட்படுத்தப்படாமலேயே 06 மாதம் காலாவதியாகியிருந்தது. அத்தோடு ரூபா 1,069,556 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அப்பொருட்கள் 2015 யூன் மாதம் 16 வரையில் அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறவில்லை.

(உ) இலங்கை மகளிர் பணியகத்தின் நிதிஏற்பாடுகளிலிருந்து எஹலியகொட பிரதேச செயலகத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட சுழற்சிக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2013 திசெம்பர் மாதம் தொடக்கம் 2015 யூன் மாதம் வரைக்கும் ரூபா 310,000 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 82,040 மீளப் அறவிடப்பட்டிருந்த போதிலும், அப்பணம் கையிருப்பில் வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. இதனால் கிடைத்த பணம் கடன் வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்டமைக்கான உறுதிப்படுத்தப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அத்துடன் கொடுப்பனவு உறுதிச்சீட்டு, காசேடு என்பன இன்மையால் பண மோசடியொன்று இடம்பெற்றிருக்க கூடுமென கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாமல் இருந்தது. காலாவதியான ரூபா 255,560 ஆன நிலுவைக் கடன் மீதியும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்டது.

### 3.9 முகாமத்துவ பலவீனங்கள்

---------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பழுதுகளுக்கான உத்தரவாத காலஎல்லை விஞ்சியிருந்த போதிலும், 93 நிர்மாண வேலைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 3,905,678 ஆன நிறுத்தி வைக்கப்பட்ட பணம் விடுவிக்கப்படாமல் இரத்தினபுரி மற்றும் கொடகவெல பிரதேச செயலகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் பெல்மடுல்ல இஹல போப்பிடிய பிரதேசத்தில் நில ஸ்திரத்தன்மை தொடர்பாக 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி குடியிருப்பாளர்களை தயார் செய்வதற்கான அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டிருக்கவில்லை. அக் குடியிருப்பாளர்களுக்கான புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு தேவையான காணி கஹவத்த பெருந்தோட்ட கம்பனியினால் விடுவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அப்பணி நிறைவேற்றப்படாமல் இருந்தது.

(இ) குறைந்த விலையை முன்வைத்த வழங்குனரின் செயலாற்றல் திருப்தியற்றதாக இருந்தமையாலும் ரூபா 5,481,814 இற்கான வேறு நிர்மாண வேலையொன்றை அவருக்கு வழங்குவதற்காக பரிந்துரை செய்யப்பட்டிருந்ததமையாலும் உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தத்தை அவரினால் 2014 ஆம் ஆண்டிற்குள் பூர்த்தி செய்வதில் இடரொன்று இருப்பதாக கொள்வனவுக் குழு தீர்மானித்திருந்தது. இதனால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் மாகாண

எழுச்சி வேலைத்திட்டத்தின் மூலம் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்ட 02 நிர்மாண வேலைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட குறைந்த விலை நிராகரிக்கப்பட்டு அதற்கு அடுத்த குறைந்த விலையை சமர்ப்பித்திருந்த வழங்குனர்களுக்கு கேள்விகள் வழங்கப்பட்டிருந்தன.

இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(i) மேற்கூறப்பட்ட குறைந்த விலை சமர்ப்பித்திருந்த வழங்குனருக்கு நிர்மாணம் மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் (ICTAD) வழங்கப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் அறிக்கை புத்தகத்தின் படி, அவருடைய முன்னைய நிர்மாண பணிகளில் குறிப்பிடத்தக்க காலதாமதம் இடம்பெற்றிருக்கவில்லை. அத்துடன் அவருடைய ஆரம்ப செயலாற்றல் பிணை திருப்தியற்றது என்பதற்கான போதுமான சான்றுகள் காணப்படவில்லை.

(ii) குறைந்த விலை நிராகரிக்கப்பட்டு இரண்டாவது வழங்குனருக்கு வழங்கப்பட்ட மேற்கூறப்பட்ட நிர்மாண பணிகள் எதுவும் 2014 ஆம் ஆண்டினுள் பூர்த்தி செய்யப்படாமலிருந்ததுடன், 2015 மே மாதம் அளவிலும் அவற்றுள் பூர்த்தி செய்யப்படாத வேலையின் அளவு முறையே 74 சதவீதம் மற்றும் 12 சதவீதமாக இருந்தன.

(iii) கொள்வனவுக் குழுவினால் எடுக்கப்பட்ட முடிவு குறைபாடுகளுடன் இருந்ததன் அடிப்படையில் குறைந்த விலைக்கு கொள்வனவு வழங்கப்படாமையால் ரூபா 843,711 ஆன நட்டமொன்று அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது.

(ஈ) மாவட்ட செயலகத்திடம் 37 அரச இல்லங்கள் தரப்படுத்தப்பட்டு காணப்பட்ட போதிலும், அது தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவின் படி மாதாந்த சம்பளத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்களின் தரத்தின் பிரகாரம் வீடுகள் தரப்படுத்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 திசெம்பர் மாதத்தில் ரூபா 3,580,653 செலவிடப்பட்டு B 04 வீடு சுற்றுலா விடுதியொன்றாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2015 மே மாதம் வரையிலும் அது பாவனைக்குட்படுத்தப்படாது சரியான முறையாக பாதுகாக்கப்படாமல் இருந்தது.

(ii) B 11 வீடு ரூபா 3,247,268 செலவிடப்பட்டு சுற்றுலா விடுதியொன்றாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் 06 மாதங்கள் மூடப்பட்டிருந்ததுடன், 2010 யூன் மாதத்தில் உத்தியோகத்தர் ஒருவருக்கு குடியிருப்பதற்காக வழங்கப்பட்டிருந்தது. 2015 மே மாதம் வரையிலும் சுற்றுலா விடுதியாக பயன்படுத்தப்படாமலிருந்தது.

(iii) B 04 வீட்டிற்குரிய 800 சதுர அடி கொண்ட கட்டிடம் 2009 யூன் மாதம் முதல் 2015 மே வரையிலும் பயன்படுத்தப்படாமல் விளைற்றிருந்தது.

(iv) B 04 வீட்டிற்குரிய நுழைவாயிலுக்கு அருகில் அத்துமீறிய கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மாவட்ட செயலாளரினால் 2007 ஜுலை மாதம் அது பரிசீலிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கும் படி இரத்தினபுரி பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் கணக்காய்வு திகதியான 2015 மே மாதம் வரையிலும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(v) உத்தியோகபூர்வ விடுதியொன்றுக்காக மாவட்ட செயலகத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்த ரூபா 16,293 ஆன நிலுவை நீர்க் கட்டணம் மற்றும் இணைப்புக் கட்டணம் என்பவற்றை அப்போது குடியிருந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vi) 15 வீடுகள் திருத்தியமைப்பதற்கு தாமதமாகியமையால் அவ்வீடுகள் வசிப்பதற்கு உவப்பற்ற வகையில் அழிவடைந்திருந்தன குடியிருப்பாளர்கள் வேண்டுக்கோள் விடுத்திருந்த போதும் அவை நிறைவேற்றப்படாத தாமதக் காலம் 01 ஆண்டு தொடக்கம் 07 ஆண்டுகள் வரையான காலவீச்சில் இருந்தது. 1417 சதுர அடி அளவிலான ஒரு வீடு 2011 ஆம் ஆண்டு முதல் திருத்த வேலைகளுக்காக மூடி வைக்கப்பட்டிருந்த போதிலும் 2016 மே 21 ஆம் திகதி அளவிலும் திருத்தம் செய்யப்படாமல் காடு வளர்ந்திருந்தது.

(vii) 04 வீடுகளின் குடியிருப்பாளர்களினால் 05 வருடங்கள் இறுதியில் மீண்டும் வதிவிட காலத்தை நீடித்தமையால் காத்திருக்கும் பட்டியலில் இருந்த உத்தியோகத்தர்களுக்கு இருந்த வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது.

(உ) உரித்தற்ற வாகனமொன்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு மாவட்ட செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அது ரூபா 765,000 இற்கு கொள்வனவு செய்த கொள்வனவாளர்அதனைக் கொள்வனவு செய்து 03 வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அதன் உரித்தை கையேற்க முடியாமல் இருந்தது.

## 3.10 நோக்கத்திற்குட்படாத செலவினம்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிராமிய பாடசாலைகளில் சுகாதார வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், இரத்தினபுரி வலய கல்வி பணிப்பாளர்களின் வகைப்படுத்தலின் படி மாவட்டத்திலுள்ள 407 கஷ்ட பிரதேச மற்றும் கிராமிய பாடசாலைகள் காணப்பட்ட

போதிலும், அப்பாடசாலைகளிலுள்ள முன்னுரிமை தேவைகள் தொடர்பான ஆய்வொன்று செய்யப்படாமல் கிராமமல்லாத 121 பாடசாலைகளின் அபிவிருத்திக்காக மொத்தம் ரூ 42,547,247 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) கிராமிய அபிவிருத்திக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து கிடைத்த ஏற்பாடுகளிலிருந்து பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், கமநல சேவை நிலையங்கள் மற்றும் அரச உத்தியோகபூர்வ வீடுகள் போன்ற அரச ஆதனங்களின் அபிவிருத்திக்காக ரூபா 8,155,526 தொகை 2014 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டிருந்தது.

## 3.11 பயனற்ற செலவினம்

------------------------------------

மாவட்ட செயலகத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) கொரியா அரசாங்கத்தின் செமாவுல் உண்டோன் செயற்திட்டத்தின் நன்கொடையின் மூலம் 2012 ஆம் ஆண்டு முதல் எஹலியகொட எபிடவத்த கம்மல் கிராமத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இது தொடர்பாக தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஆம் ஆண்டில் ரூபா 564,064 பெறுமதியான துனுகொல உற்பத்தி செய்வதற்கான இயந்திரம் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் அது 2015 யூலை மாதம் வரையிலும் பொருத்தப்பட்டிருக்கவில்லை. அத்தோடு இரும்பு நொருக்கும் இயந்திரமும் (Belt hammer Machine) அது பொருத்தப்பட்ட 2007 ஆம் ஆண்டிலிருந்தே இயங்காதிருந்தது.

(ii) மூலதன வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதும் முறையான கண்காணிப்பின்மையால் 18 கொல்லன் பட்டறைகளிலிருந்து 2015 யூலை மாதம் வரையிலும் 03 பட்டறைகளின் வேலை நிறைவு செய்யப்படாமல் இருந்ததுடன், வேலை நிறைவு செய்யப்பட்டிருந்த 04 பட்டறைகளில் உற்பத்தி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வெளிநாட்டு சுற்றுலாவிற்காக பங்கேற்றவர்களின் எண்ணிக்கை மற்றும் இலங்கை மற்றும் கொரியாவினால் மேற்கொள்ளப்பட்ட முழுச் செலவினம் அடங்கலாக மொத்த செயற்திட்டத்திற்கான செலவினம் தொடர்பான தகவல்கள் கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின்

செயலாளரினால் கணக்காய்விற்கு முன் வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், விற்பனை செயன்முறை மற்றும் உற்பத்திக்கான சந்தையொன்றை அறிமுகப்படுத்தல் மற்றும் ஒன்றுப்படுத்தப்பட்ட கொல்லர் கிராமமொன்றை உருவாக்குதல் போன்ற இத்திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படாமல் இருந்ததுடன், கொல்லர்களினால் அவர்கள் பாரம்பரியமாக செய்து வந்த கத்தி உற்பத்தி மாத்திரம் இடம் பெற்றது. இதனால் இதற்காக ரூபா 4,161,000 செலவிடப்பட்டமை பயனற்றதாக இருந்தது. அத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் படி, ரூபா 758,209 செலவிடப்பட்ட 04 சந்தர்ப்பங்களில் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளடங்களாக அரச அதிகாரிகள் 12 பேர் இச்செயற்திட்டத்திற்காக வெளிநாட்டு சுற்றுலாவிற்கு சென்றிருந்த போதிலும் கொல்லர்களின் வாழ்வாதாரத்திற்கு எதுவித பங்ககளிப்பும் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் இரத்தினபுரி மாவட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை மிகவும் செயற்திறன்மிக்கதாக பயன்படுத்தும் நோக்கோடு விழிப்பூட்டும் கூட்டமொன்று 2014 மார்ச் மாதத்தில் நடாத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) எவ்வித கொள்வனவுக் குழு தீர்மானமொன்றும் இல்லாமல் ரூபா 2,396,550 தொகை சேவை வழங்குவதற்காக கூறுவிலை கோரப்பட்டிருந்தது. அந்த கூறுவிலை திறத்தல் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரின் தலைமையிலான குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அதில் கூறுவிலை சமர்ப்பித்த எவரும் கலந்து கொண்டிருக்கவில்லை.

(ii) இந்த விழாவிற்கு தேவையான தகர மேவுகை உள்ளடங்கலாக ஏனைய உபகரணங்களை குறைந்த விலையில் இரத்தினபுரி பிரதேசத்திலேயே பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த போதும், அது தொடர்பாக கவனத்திற் கொள்ளாமையால் ரூபா 613,350 கூடுதலாக அரசாங்கம் செலுத்த வேண்டியிருந்தது.

(iii) பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் பிரதேச அபிவிருத்திக்காக பெறப்பட்ட நிதிஏற்பாடுகள் மாவட்ட செயலாளரின் கண்காணிப்பின் கீழ் அந்தந்த பிரதேச செயலகங்களினால் செலவிடப்பட்ட பிரதேச அபிவிருத்தி நடவடிக்கையை நிறைவேற்றுவதற்கு முற்காலத்திலிருந்து தொடர்த்

தேர்ச்சியாக முறையாக நடைபெற்று வரும் செயற்பாடாக இருந்தது. இதனால் அதிக செலவை மேற்கொண்டு தொடர்ந்து விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்வது ஆக்கபூர்வமான செயற்பாடொன்றாக இல்லாமையால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 3,767,606 மொத்தமும் பயனற்றதாக இருந்தது.

(இ) கலாசார மற்றும் கலை தொடர்பான அமைச்சிடமிருந்து கிடைத்த நிதிஏற்பாடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட 07 கலாசார நிலையங்கள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) சிற்றுண்டிச்சாலை, மேடைகள், களஞ்சியசாலை போன்ற அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படாமையால் கொடகவெல கலாசார நிலையத்தினைச் சுற்றி புற்கள் முளைத்து பயன்படுத்தப்படாமலிருந்தது. மின்சார பொருத்துகைகள் காணாமல் போயிருந்ததுடன், அங்கிருந்த பலாப் பலகையிலான கதவுகள் பாதுகாப்பிற்காக கழற்றப்பட்டு பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ii) கஹவத்த கலாசார நிலையத்தின் நிர்மாணப்பணி ஆரம்பிக்கப்பட முன்னர் நில ஸ்திரத்தன்மை தொடர்பாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலையத்தின் பரிந்துரை பெறப்படாமையும், நிர்மாணப்பணி ஆரம்பிக்கப்பட்ட பின் அவ்விடத்தில் காணப்பட்ட நிலச்சரிவு அபாயத்தினை அந்நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் செயற்படாமையாலும், 2013 திசெம்பர் மாதம் வரையிலும் நிர்மாணப்பணி பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடம் எவ்வித நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்த முடியாமலும் இருந்தது.

(iii) கொலன்ன கலாசார நிலையத்தை நிர்மாணிப்பதற்கு 2010 ஆம் ஆண்டில் ரூபா 676,714 செலவிடப்பட்டு அத்திவாரம் இடப்பட்டது தவிர வேறெந்த வேலையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) 2010 ஆம் ஆண்டில் நிர்மாணப்பணி ஆரம்பிக்கப்பட்ட போதும் 2015 திசெம்பர் மாதம் வரையிலும் அதன் வேலைகள் நிறைவு செய்து நோக்கத்திற்கேற்ப செயற்பாட்டிற்கு பயன்படுத்துவதற்கு தவறியமையால் 07 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்கு அக்காலப் பகுதியில் செலவிடப்பட்ட ரூபா 8,671,118 தொகை பயனற்றதாக இருந்தது.

(ஈ) பாடசாலையொன்று நிர்மாணிப்பதற்கு 10 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான பாடசாலையொன்று நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன் அது மீண்டும் காடுகளினால் மூடப்பட்டிருந்தது. இதனால் இரத்தினபுரி பிரதேச செயலகத்தினால் செலவு செய்யப்பட்ட ரூபா 333,471 தொகை பயனற்ற செலவினமாக இருந்தது.

**3.12 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 59 | 49 | 10 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 41 | 22 | 19 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,204 | 1,150 | 77 | 23 |
| (iv) | ஆரம்ப நிலை | 179 | 183 | 01 | 05 |
| | மொத்தம் | 1,483 | 1,404 | 107 | 28 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆட்சேர்க்கப்பட்டிருந்த மிகை பதவியணினர் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1992 ஆம் ஆண்டின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.